ஸ்பெஷல் அப்பெல்லேட் ட்ரிபுனல்' என்பதில் வழக்குகள் நடைபெறுகின்றன. விரைவில் தீர்ப்பு வரும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் நீடாமங்கலம் வட்டம் ஆதனூர் கிராமத்தில் 6 நபர்களிடமிருந்து 108 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டது. அது வினியோகிக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்டபின் அங்கே விதிமுறைகள் மீறப்பட்டதன் காரணத்தால் அந்த நிலம் திருப்பி அரசிடத்தில் மனுச் செய்துகொண்டிருக்கிறார்கள். அது நியாயமாக இருந்தால் திருப்பி அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல், குடவாசல் வட்டத்தில் திரு. கே. ஈ. எம். முகமது ஷெரீப் என்பவரிடத்திலேயிருந்து 7.45 ஏக்கர் எடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இன்றைக்கு ஹைகோர்ட்டிலே இருக்கிறது. ஹைகோர்ட்டிலே முடிவெடுக்கப்படும். இப்போது காயிதே-மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதே நிலைதான். நாகப்பட்டினம் கீழையூர் கிராமத்திலே, வேதாரண்யம் சாதுக்கள் மடத்திற்குச் சொந்தமான நிலங்களில் 100.36 ஏக்கர் அளவுக்கு மொத்தம் ஐந்து வழக்குகள் தான் இருக்கின்றன. வேறு ஒன்றுமில்லை. உங்கள் மாவட்டத்தில் அந்த நிலம் முழுவதும் எடுக்கப்பட்டு தமிழ்நாடு லேண்ட் ரிஃபார்ம் கோர்ட்டிலே இருக்கிறது. விரைவில் தீர்ப்பு வரும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தம்புசாமி, நீங்கள் குறுக்கே வந்தவர்தான். நீங்களே கேட்ட கேள்வி அல்ல. இது காயிதே மில்லத் மாவட்டம் பற்றியது. உங்களுக்கு அது பற்றிய விவரமே புரியாது. (குறுக்கீடு) அப்படிக் கேட்பதற்கு விதியிலே இடமில்லை, இரண்டாவது கேள்வி கேட்கமுடியாது.

வினா எண் 163, **டாக்டர் மு. காளிராஜன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

163--

மதுரை மருத்துவக்கல்லூரியில் பி. எஸ்.சி (செவிலியர் பயிற்சி) ஆரம்பித்தல்

****10389-டாக்டர் மு. காளிராஜன்:***

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் பி.எஸ்.சி (செவிலியர் பயிற்சி) ஆரம்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் போதிய அளவுக்கு மருத்துவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் இந்த டெக்னிக்கல் பெர்சன்ஸ் போதிய அளவுக்கு தற்போது அரசு மருத்துவமனைகளில் இல்லை. அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதில் அளித்து இருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெக்னிக்கல் பெர்சன்ஸ் என்ற வகையில் அரசு மருத்துவ மனைகளுக்கு இப்போது நமக்குப் போதிய அளவுக்கு இருக்கிறார்கள். ஆனால் வெளியிலே தேவையான டெக்னிக்கல் பெர்சன்ஸ் இல்லை என்பதற்காகத்தான் அரசு அதற்குரிய நடவடிக்கை எடுத்திருக்கிறது. உதாரணமாக பாரா-மெடிகலிலே, மருத்துவர்கள் வருகின்ற அளவுக்கு பாரா-மெடிக்கல் ஸ்டாஃப் இல்லாத பிரச்சினை வெளியிலே இருக்கின்றது என்ற தகவல் வந்திருக்கிறது. மத்திய அரசும் 1989 ஆம் ஆண்டிலேயிருந்து அதை வலியுறுத்தியிருக்கிறது. எனவே நம் அரசின் மூலமாக இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பது இன்றைக்கு இருக்கின்ற நிதிப் பிரச்சினையிலே கடுமையான சூழ்நிலை இருக்கிறது என்ற காரணத்தினால் தனியார் மூலமாக அதை ஊக்குவித்து வெளியிலே என்ன தேவையோ அந்த தேவைக்கு ஏற்ப அவர்களை தயார் செய்வதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கத்துக்குத் தேவையான அளவுக்கு நாம் வெளியிலே இருப்பவர்களை எடுத்து இப்போது வைத்து இருக்கிறோம். எனவே அரசாங்கத்துக்கு அந்த பிரச்சினை இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மருத்துவக் கலலூரிகளிலும் இதுபோன்ற பயிற்சி வகுப்புகள் இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் கருதி அவற்றை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நாம் டிப்ளமோ கோர்ஸ் நடத்துகிறோம். இப்போது அதற்கு மேலே பி.எஸ்.சி. (நர்சிங்) என்று நடத்துவது என்று சொன்னால் கூடுதலாக அரசாங்கத்திற்கு செலவாகிறது. எனவே செலவு அதிகமாக ஆகின்றது என்ற காரணத்தினால்தான் நாம் நடத்த முடியாத நிலை இருக்கிறது. இப்போதே கூட வெளிநாடுகளிலே பி.எஸ்.சி (நர்சிங்) படித்தவர்களுக்கு அதிகமான வேலைவாய்ப்பு இருக்கிற காரணத்தினாலேயும், இங்கே நம்முடைய தமிழகத்திலேகூட அல்லது மற்ற மாநிலங்களிலேகூட இது போன்ற பாரா-மெடிக்கல் கோர்ஸ் படித்தவர்களுக்கு அதிக டிமாண்ட் இருக்கின்ற காரணத்தினால், நாம் அவர்கள் வேலைவாய்ப்பைக் கருதி, அப்படிப்பட்டவர்களுக்கு ஊக்கம் தரவேண்டும், அவர்களுக்கு அதிக வாய்ப்பைக் கொடுக்கவேண்டும் என்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அரசிலே இருக்கின்ற இடங்களில் இப்போது இருக்கிற டிப்ளமோ கோர்ஸ்-ஐ பி.எஸ்.சி (நர்சிங்) ஆக கன்வர்ட் செய்வதற்கும், அதே நேரத்திலே தனியார் சில பேர்களுக்கு கொடுத்து அதன் மூலமாக அவர்கள் தயார் செய்பவர்கள் அரசு சார்பாகவோ அல்லது வெளியிலோ அல்லது வெளிநாட்டிற்கோ செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகின்ற வகையிலே இப்போது ஊக்குவிக்கப்பட்டிருக்கிறது. எனவே அரசினுடைய சார்பாக நிதிநிலை கருதி நாம் செய்யமுடியாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது பி.எஸ்.சி (நர்சிங்) கோர்ஸ் படிக்கின்ற மாணவ மாணவிகள் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் சென்று விடுகிறார்கள். அரசு பணத்திலே படித்து இந்த நாட்டிற்கு உபயோகமாக சேவை செய்வதை விட்டு விட்டு வெளிநாடு செல்கின்ற குறிக்கோளிலேயே அவர்கள் இருக்கின்ற காரணத்தினால், அதைத் தடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை தடுப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் நிச்சயமாக எடுக்காது. எவ்வளவு பேர் வெளிநாடு போகிறார்களோ அவர்களுக்கு மாலை போட்டு இந்த அரசாங்கம் அனுப்பி வைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெளிநாட்டிலே வேலை கிடைப்பது என்பது மிகப் பெரிய அரிதான காரியம். எனவே பி.எஸ்.சி (நர்சிங்) படித்தவர்களுக்கு, பாரா-மெடிக்கல் கோர்சிலே நல்ல தேர்ச்சி

1994 ஏப்ரல் 4]

பெற்றவர்களுக்கு வெளிநாட்டிலே நல்ல மரியாதை இருக்கிறது. எவ்வளவு பேர் போனாலும், இங்கே இருக்கின்ற இடத்தை நிரப்புவதற்கு நாம் இங்கே த்யார் செய்ய வேண்டுமேயொழிய, வெளிநாடு போகக் கூடாது என்று தடுப்பது சரியல்ல. எனவே, அதற்காகத்தான் இப்போழுது அரசாங்கம் இங்கே நிறைய பேரை தயாரிப்பதற்கு, உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10.15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *164*, திருமதி இரா. பாண்டியம்மாள் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

164--

திம்மநத்தம் கிராமத்தில் சுகாதார நிலையம் அமைத்தல்

***17543-திருமதி இரா. பாண்டியம்மாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், திம்மநத்தம் கிராமத்தில் சுகாதார நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி ஒன்றியம், திம்மநத்தம் சுற்றியுள்ள பாப்பாப்பட்டி, லிங்கப்பநாயக்கனூர், சிலிவச்சான்பட்டி, கொப்ளிப்பட்டி இன்னும் பல கிராமங்கள் இருக்கின்றன. இங்குள்ள மக்கள் அனைவரும் சிகிச்சைக்காக அவசரமாக செல்ல வேண்டுமானால் ஒரு 10 கிலோமீட்டர் தூரம் உசிலம்பட்டி மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். ஆகையால் மக்கள் நலன் கருதி எங்களுடைய அன்புத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு மீண்டும் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா பட்டியையும் இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்